# யமதர்மராஜர் பெற்ற சாபம்

சாந்திப்பிரியா

விதுரா என்பவர் ஹஸ்தினாபுரத்தை ஆண்டு வந்த ஒரு அரசியின் வேலைக்காரியின் மகன். மாண்டவ்ய முனிவர் கொடுத்த சாபத்தின் காரணமாக அந்த வேலைக்காரிக்கு மகனாகப் பிறந்தவர் யமதர்மராஜர் என்று ஒரு கதை உண்டு. வெகு காலம் முன் தன் குடிலுக்கு அருகில் சில நாட்களாக மாண்டவ்ய முனிவர் மௌன விரதம் பூண்டு தவத்தில் ஆழ்ந்து இருந்தார். அப்பொழுது அரச சேவகர்கள் சில திருடர்களைத் துரத்திக் கொண்டு அந்த வழியாக ஓடி வந்து கொண்டிருந்தனர்.

அரசனின் அரண்மனையில் இருந்து சில நகைகளை திருடிக் கொண்டு ஓடிய திருடர்கள் தம்மை துரத்தி வந்த அரண்மனை சேவகர்களிடம் இருந்து தப்பிக்க அந்த நகைகளை மாண்டவ்ய முனிவர் குடிலில் போட்டு விட்டனர். அது அவருக்குத் தெரியாது.

அதன் பின் மாண்டவ்ய முனிவர் தவத்தில் இருந்த இடத்தின் அருகில் இருந்த புதரில் புகுந்து திருடர்கள் தப்பி ஓடி விட்டனர். அவர்கள் எப்படித் தப்பிச் சென்றனர் என்றும் அவர்கள் தப்பிச் சென்ற வழியையும் தெரியாமல் விழித்த அரச சேவகர்கள் அந்த இடத்தில் மௌன விரதம் பூண்டு தவத்தில் இருந்த முனிவரிடம் சென்று அந்தத் திருடர்கள் எந்தப் பக்கமாக ஓடினார்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டனர். அவர் மௌன விரதம் பூண்டு தவத்தில் இருந்ததினால் பதில் எதுவும் கூற முடியாமல் மௌனமாக இருக்க, அவரும் திருடர்களுக்கு உதவியாக இருக்கிறார் என்று அரச சேவகர்கள் தவறாக நினைத்து விட்டனர்.

மேலும் அவருடைய ஆசிரமத்தில் நுழைந்து திருடர்களைத் தேடிய பொழுது திருடர்கள் அங்கு போட்டுவிட்ட நகைகளைக் கண்டு பிடிக்க, முனிவரும் திருடர்களுக்கு உதவி உள்ளார் எனத்



தவறாக நினைத்து மௌன விரதத்தில் இருந்த அவரை கூர்மையான ஒரு மரத்தின் கட்டை மீது ஏற்றி வைத்துவிட்டுச் சென்று விட்டனர். அது மிகவும் கூர்மையாகவும், மரத்தின் அடிப்பகுதி தடித்தும் இருந்ததினால் மெல்ல மெல்ல உடல் கீழ் இறங்கி இரத்தமும் சொட்டச் சொட்டச் சொல்ல முடியாத வேதனைக்கு ஆளாக்கி மெல்ல மெல்லக் கொல்லும் கழுகு மரத்தைப் போன்ற அமைப்பு கொண்டது. அதில் அவரை அமர்ந்த நிலையிலேயே வைத்துவிட்டுப் போக மாண்டவ

முனிரவரின் தியானம் கலைந்தது. உடல் வேதனைப்பட்டாலும், வலியால் துடித்தாலும் தமது தவ வலிமையினால் அவற்றைப் பொறுத்துக் கொண்ட மாண்டவ்ய முனிவர், தன்னை வேண்டும் என்றே யமராஜன் தன்னை கொடுமைப் படுத்தி விட்டதாகக் கருதி தன் உடலில் புகுந்துள்ள கட்டையுடன் இரத்தம் சொட்டச் சொட்ட அவரிடம் நேரில் சென்று அதற்கான காரணத்தைக் கேட்டார்.



யமராஜரும் மாண்டவ முனிவர் முன் பிறவியில் தம் இள வயதில் சிறு சிறு பிராணிகளை ஊசிகளால் குத்தி

கொன்றதினால்தான் இந்த ஜன்மத்தில் அவருக்கு அதற்கேற்ப தண்டனை தந்ததாகக் கூற முனிவர் கோபமடைந்தார். பூர்வ ஜென்மத்தில் சிறு வயதில் அறியாமையினால் செய்த பிழைக்கு, இந்த ஜென்மத்தில் அவருடைய முதுமையையும், வயதையும் கூடப் பார்க்காமல் கொடுமையாக தண்டித்ததற்கு கண்டனம் தெரிவித்து, யமராஜர் தம் கடமையை நீதிப்படி செய்யவில்லை என்று கூறி அதற்காக அவர் கடுமையாக மனவேதனை அடையும் வகையில் கீழ் குலத்தில் பிறவி எடுக்க வேண்டும் என சாபமிட்டதினால்தான் அவர் விதுரராகப் பிறக்க வேண்டி இருந்தது. அவர் எடுத்த அந்தப் பிறவியில் பல முறை மீண்டும் மீண்டும் அவர் உதாசீனப்படுத்தப்பட்டு, எந்த வித நியாயமும் இல்லாத முடிவுகளை எடுத்து வந்த தம் சந்ததியினரால் சூழப்பட்டு மன வேதனை அடைய வேண்டி இருந்தது. தன் கடைசி கால கட்டம் வரை அவர் மன நிம்மதி இன்றி மெல்ல மெல்ல மடிந்தாராம். அவர் மரணத்துடன் யமதர்மராஜரின் முந்தைய சாபமும் முடிவுற்றது.